12.04.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## கோடை மழை: கம்பம் பள்ளத்தாக்கில் பயறு விதைப்பு பணி தீவிரம்

கம்பம் பள்ளத்தாக்கில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் கோடை மழையால், அப்பகுதியிலுள்ள நிலங்களில் பயறு விதைப்பு பணி தொடங்கியது.

முல்லைப் பெரியாறு நீர்ப்பாசனத்தின் மூலம், தென் தமிழகத்திலேயே அதிகளவில் நெற்பயிர் விவசாயம் நடைபெறுவது தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதி மட்டுமே. இப்பகுதியில், ஜூலை மாதத்தில் தொடங்கி மார்ச் மாதம் வரையில் இருபோகமாக நெற்பயிர் விவசாயம் நடைபெறும்.

பின்னர், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் முல்லைப் பெரியாற்றில் நீர்வரத்து குறைந்து விடுவதால், அந்த மாதங்களில் தானிய பயறு வகைகளை விதைப்பது வழக்கம். இதில், பாசிப் பயறு, உளுந்து உள்ளிட்ட பயறு வகைகளை அதிகளவில் விளைவிக்கின்றனர்.

தற்போது, இரண்டாம் போக நெற்பயிர் விவசாயம் சில நாள்களுக்கு முன்பாக நிறைவு பெற்றது. அதைத் தொடர்ந்து, பயறு விவசாயம் மேற்கொள்ள கோடை மழைக்காக காத்திருந்தனர். அதன்படி, கம்பம் பள்ளத்தாக்குப் பகுதிகளான சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் மற்றும் கூடலூரில் கடந்த சில நாள்களாக கோடை மழை பெய்து வருகிறது. எனவே, நெல் அறுவடை செய்த வயல்வெளிகளை டிராக்டர் மூலம் உழுது, பாசிப் பயறு மற்றும் உளுந்து பயறு வகைகளை விதைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**ஊறுகாய் மாங்காய் வரத்து தொடக்கம்**

ராஜபாளையம் மற்றும் சுற்றுப்பகுதியில் மாந்தோப்புகள் அதிகளவில் உள்ளன. இங்கு சப்பட்டை, பஞ்சவர்ணம், காசாலட்டு, நெல்லூர் சப்பட்டை போன்ற பழவகை மாமரங்களும், ஊறுகாய்க்கு ஏற்ற புளிப்புச் சுவை மிகுந்த கிளிமூக்கு, கல்லாமை ரக மரங்களும் அதிகளவில் உள்ளன.இன்னும் இரு வாரங்களில் மாம்பழ சீசன் துவங்கவுள்ள நிலையில் தற்போது ஊறுகாய் மாங்காய் வரத்து அதிகரித்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எலுமிச்சம்பழத்துக்குமாற்றுபொருள்**

வெயில்காலத்தில் எலுமிச்சம்பழத்தின் தேவை அதிகமாக உள்ளதால், விலையும் அதிகமாக இருக்கும். எலுமிச்சம்பழத்துக்கு மாற்றாக சிட்ரிக் அமிலத்தை பயன்படுத்துகின்றனர். செயற்கை குளிர்பானங்களில் புளிப்புச் சுவைக்காகவும், பதப்படுத்தப்பட்ட பழச்சாறுகளில் பதப்படுத்தும் பொருளாகவும் சிட்ரிக் அமிலமே சேர்க்கப்படுகிறது. வெண்ணிற படிகவடிவமுடைய இந்த சிட்ரிக் அமிலத்தின் அளவு குறித்து ஆசிய நாடுகளில் சில தர நிர்ணய வழிகாட்டியை அறிவித்துள்ளன.சில நாடுகளில் சிட்ரிக் அமிலத்தின் அளவு ஒரு கிலோவுக்கு 25 கிராம் என்ற அளவில் உள்ளது. இதனை அதிகம் பயன்படுத்தினால் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தும்.

## 'வாகை' சூடும் வண்ண, வண்ண பூக்கள்

பந்தலூர்: பந்தலூர் பகுதியில், பூத்துக்குலுங்கும் வாகை பூக்கள் பார்வையாளர்களை வசீகரித்து வருகின்றன.

பந்தலூர் பகுதியில், உள்ள தேயிலை தோட்டங்களை ஒட்டிய சாலைகளில், பல்வேறு வகையிலான பூக்கள் பூக்கும் மரங்கள் காணப்படுகின்றன. இதில், உள்ளூர் மக்களால் 'வாகை' என்று அழைக்கப்படும்,'பிலோனிக்ஸ் ரிஜியா' எனப்படும் பூக்கள், அதிகளவில் பூத்து காணப்படுகின்றன.

பச்சை நிறத்திலான இலைகளுக்கு மத்தியில் சிவப்பு நிறத்தில் பூத்து காணப்படும், இந்த பூக்கள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்து வருகின்றன.

இதனால், இந்த பூக்கள் உள்ள மரத்தின் முன்பாக நின்று 'போட்டோ' எடுத்து செல்வதிலும், வாகனங்களை நிறுத்தி பூக்களை ரசித்து செல்வதில், வெளிமாநில சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## பட்டுப்புழுவை தாக்கும் 'ஊசி ஈ'

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் பட்டுப்புழுவை தாக்கும் 'ஊசி ஈ' யை கட்டுப்படுத்த பட்டுவளர்ச்சித் துறை உதவி இயக்குனர் ரமேஷ் ஆலோசனை கூறினார்.

அவர் கூறியதாவது: 'ஊசி ஈ' பட்டுப்புழுக்களை தாக்கும் உள் ஒட்டுண்ணி. பட்டுப் புழுவின் மேல் ஓரிரு முட்டைகளை இடும். அறுபத்திரண்டு மணி நேரத்தில் முட்டைகளை பொரித்து பட்டுப்புழுவின் உடலை துளைத்து உள்ளே செல்லும்.

இதனால் புழுவின் உடலில் கருப்பு நிற வடு தோன்றும். இப்பூச்சி தாக்குதலால் பட்டுக்கூடு மகசூலில் 20 சதவீதம் வரை சேதம் ஏற்படும்.

தடுப்பு முறைகள்: புழு வளர்ப்பு குடிலின் கதவு ஜன்னல்களில் நைலான் வலைகளால் தடுப்பு ஏற்படுத்தி 'ஊசி ஈ' உள்ளே நுழைவதை தடுக்க வேண்டும்.

மருந்து கரைசலை வெளிச்சம் வரக்கூடிய ஜன்னல் அருகில் வைக்க வேண்டும். மருந்தினை புழுவின் மீது தெளிக்கலாம். தைமஸ் ஒட்டுண்ணிகளை பயன்படுத்தி ஊசி ஈ கூட்டு புழுக்களை அழிக்கலாம்.

இந்த ஈ தாக்கிய புழுவினை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும். புழு வளர்ப்பு குடிலின் தரையில் ஓட்டைகள், கீறல்கள் இன்றி பார்த்து கொள்ள வேண்டும். எருக்குழிகளிலும் தைமஸ் ஒட்டுண்ணிகளை கட்டி விடலாம், என்றார்.

## மழை இன்றி மானாவாரி பயிர்கள் பாதிப்பு - கொய்யாவும் தப்பவில்லை

பழநி: கோடை மழை பெய்யாத காரணத்தால் பழநி பகுதியில் தென்னை, மா, கொய்யா மற்றும் மானாவாரி பயிர்கள் தண்ணீர் இன்றி வாடி வருவதால் காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் கோடை மழையை நம்பி தென்னை, மா, கொய்யா மற்றும் மானாவாரி பயிர்களான மாக்காச்சோளம், தட்டைப்பயறு, உளுந்து உள்ளிட்டவற்றை விவசாயிகள் பயிரிடுகின்றனர்.

அக்டோபர், நவம்பரில் மழைபெய்து வரதமாநதி, பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு அணைகள் நிரம்பியபோது தொடர்ந்து 3 மாதங்களாக மழை இல்லாத காரணத்தாலும், கோடை வெயில் அதிகரித்துள்ளதாலும் அணைகள், குளங்களில் தண்ணீர் குறைந்து நீர்ப்பிடிப்பு பகுதிகள் மைதானமாகி உள்ளது.

இதனால் நிலத்தடிநீர் மட்டம் வெகுவாக குறைந்ததால் கிணற்று நீர் பாசனம், சொட்டுநீர்ப் பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் செய்வதறியாது உள்ளனர். பழநி பகுதியில் தக்காளி, கத்தரி, வெண்டை உள்ளிட்ட காய்கறிகள், கொய்யா, மா, தென்னை உள்ளிட்டவைகளின் விளைச்சலும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஆறு, அணையை ஒட்டிய தென்னை மரங்கள் மட்டுமே தப்பி உள்ளன. மற்ற இடங்களில் உள்ள தென்னை மரங்கள் வாடி வருகின்றன.

ஆழ்குளை அமைத்தாலும் தண்ணீர் கிடைப்பது சிக்கலாக உள்ளதால் பெரும்பாலான விவசாயிகள் கோடைவிவசாயத்தை கைவிட்டு நிலங்களை தரிசாக விட்டுவிட்டனர். மழையை நம்பி மானாவாரிபயிர்கள், காய்கறிகள் சாகுபடி செய்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## விவசாயிகள் வீரவணக்க நாள்

வேடசந்துார்:வேடசந்துாரில் துப்பாக்கி சூட்டில் பலியான விவசாயிகளுக்கான வீர வணக்க நாள் கூட்டம் நடந்தது.

வேடசந்துாரில் விவசாயிகள் சங்கம் சார்பில், 1978ல் உயர்த்தப்பட்ட ஒரு பைசா மின் கட்டணத்தை ரத்து செய்யக்கோரி தமிழகத்தில் பெரும் போராட்டம் வெடித்தது. ஏப்.9ம் தேதி போலீசார் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஆறு விவசாயிகள் பலியாயினர்.

இதை தொடர்ந்து உயிர் நீத்த தியாகிகள் நினைவு நாள் கடைபிடிக்கப்படுகிறது. நேற்று நடந்த கூட்டத்திற்கு தமிழக விவசாயிகள் முன்னேற்ற சங்க தலைவர் சுப்பிரமணி தலைமை வகித்தார். செயலாளர் ராமசாமி முன்னிலை வகித்தார்.

தி.மு.க., ஒன்றிய செயலாளர் சாமிநாதன், ம.தி.மு.க., ஒன்றிய செயலாளர் ராமசாமி, மக்கள் நல மன்ற தலைவர் பழனியப்பன் பங்கேற்றனர். போராட்டக்குழு தலைவர் முத்துச்சாமி நன்றி கூறினார்.

## கிணற்று பாசனத்தில் மாமரம் வளர்ப்பு: வாங்கல் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி

வாங்கல்: கரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட பகுதியில் ஆங்காங்கே கிடைக்கும் கிணற்றுப்பாசனம் மூலம் மாமரம் பயிரிடப்பட்டு வருகிறது.

கரூர் அடுத்த, வாங்கல் பகுதியில், தென்னை, வாழை, கரும்பு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இதுகுறித்து, வாங்கல் பகுதியைச் சேர்ந்த விவசாயி நல்லதம்பி கூறியதாவது: கரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட வாங்கல்- மண்மங்கலம் செல்லும் வழியில் நிலத்தடி நீர்மட்டம் அதிகம் இருப்பதால், நெற்பயிர்கள் சாகுபடி செய்து வந்தோம். தற்போது, நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதாலும், ஆங்காங்கே கிணற்று பாசனம் மூலம் மோட்டார் வைத்து மாமரங்கள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளோம். நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர் சாகுபடிகளை விட, மாமரத்தின் மூலம் அதிகமாக தற்போது எங்களுக்கு வருமானம் ஈட்டிக் கொடுப்பதால் மாமர சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகிறோம். கோடை காலத்தில் தான், மாமரம் பூத்துக் குளுங்கி நல்ல விளைச்சலைத் தரும். அதேபோல் தற்போது மாமரங்கள் நன்கு வளர்ந்துள்ளன. வாங்கல் - மண்மங்கலம் இடையே பல்வேறு இடங்களில் கிணற்று பாசனம் மூலம் தற்போது மாமரக்கன்றுகள் நடப்பட்டு வளர்த்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளின் வாழ்க்கையை மணக்கச் செய்யும் 'மல்லிகை'

தேனி:மாவட்டத்தில் மல்லிகை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு கோடையிலும் நிரந்தர வருமானம் கிடைத்துவருவதால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தேனி அருகே சிவலிங்கநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, சீலையம்பட்டி, ஆண்டிபட்டி அருகே மரிக்குண்டு, மல்லையாபுரம், டி.சுப்புலாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் மல்லிகை சாகுபடி நடக்கிறது.

விவசாயிகள் குறைந்தது 40 சென்ட் முதல் 2 ஏக்கர் வரை இச்சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். சீசன் நேரங்களில் மல்லிகைக்கு கடும் கிராக்கி ஏற்படுவதால், அதிக விலை போகும் என்ற நம்பிக்கையில் பெரும்பாலானோர் இத்தொழிலில் இறங்கி உள்ளனர். இங்கு பறிக்கப்படும் மல்லிகை தேனியில் உள்ள பூ கமிஷன் கடைகளில் மொத்த விற்பனையில் கிலோ ரூ.150க்கு விற்கப்படுகிறது. சிவலிங்கநாயக்கன்பட்டி விவசாயி செல்வராஜ் கூறுகையில்,

“ 40 சென்ட் நிலத்தில் மல்லிகை சாகுபடி செய்துள்ளேன். தற்போது பூ பறிப்பு நடக்கிறது. கூலியாக தலா ரூ. 130 வழங்கப்படுகிறது. ஒரு செடிக்கு குறைந்தது ஒரு கிலோ வரை கிடைக்கிறது.

செடிகளில் மொட்டுக்கள் அதிகம் காணப்படுவதால் தினமும் பூ பறிக்கப்படும்.

நாளொன்றுக்கு 35 முதல் 40 கிலோ வரை பூ கிடைக்கிறது. கோடையிலும் பூ சாகுபடி கை கொடுப்பதால் விவசாய செலவு, பறிப்பு கூலி போக தினமும் ரூ. 1000 லாபம் கிடைத்து வருகிறது. வரத்து அதிகமுள்ள நேரங்களில் மல்லிகை விலையில் பெரும் சரிவு ஏற்படும்”, என்றார்.

## ரூ.14 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

ராசிபுரம்: ராசிபுரம், ஆர்.சி.எம்.எஸ்.,ல், 856 பருத்தி மூட்டை, 14 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. ராசிபுரம் மற்றும் நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி, தேங்கல்பாளையம், கதிராநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில், 5,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், ராசிபுரம் ஆர்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம் தோறும், திங்கட்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படும். நேற்று நடந்த ஏலத்தில், 856 மூட்டை பருத்தி ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதன்படி, ஆர்.சி.?ஹச்., குறைந்தபட்சம், 4,552 ரூபாய், அதிகபட்சம், 4,886 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 5,029 ரூபாய்,

அதிகபட்சம், 6,339 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 856 மூட்டை பருத்தி, 14 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## விளைச்சல் சரிந்ததால் உளுந்து மூட்டைக்கு ரூ.1,500 அதிகரிப்பு




சேலம் : தமிழகம் மற்றும் வட மாநிலங்களில் நடப்பாண்டு உளுந்து விளைச்சல் சரிவால், மார்க்கெட்டுக்கு உளுத்தம்பருப்பு வரத்து குறைந்துள்ளது. இதன் காரணமாக மூட்டைக்கு ரூ.1,500 வரை விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சேலம், விருதுநகர், கோவில்பட்டி, சிதம்பரம், சீர்காழி உள்ளிட்ட பகுதிகளிலும், வட மாநிலங்களில் மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் உளுந்து சாகுபடி செய்யப்படுகின்றன. நடப்பாண்டு அனைத்து பகுதிகளிலும் உளுந்து விளைச்சல் சரிந்துள்ளது.

இதன் காரணமாக மார்க்கெட்டுக்கு வழக்கமாக வரவேண்டிய உளுந்து வரத்து குறைந்துள்ளது. இதனால் உளுத்தம் பருப்பு விலை கடந்த பிப்ரவரி மாதத்தைவிட நடப்பு மாதம் விலை கூடியுள்ளது. இதுகுறித்து சேலம் செவ்வாய்பேட்டை மளிகை வியாபாரிகள் கூறியதாவது: தமிழகம் மற்றும் வட மாநிலங்களில் நடப்பாண்டு 25 சதவீதம் உளுந்து விளைச்சல் சரிந்துள்ளது. வழக்கமாக பர்மாவில் இருந்து உளுந்து இறக்குமதி செய்யப்படும். அங்கு நடப்பாண்டு உளுந்து விளைச்சல் குறைந்ததால், இறக்குமதி செய்யப்படவில்லை. இதன் காரணமாக உளுத்தம் பருப்பு விலை அதிகரித்துள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் 100 கிலோ எடைக்கொண்ட உளுத்தம் பருப்பு மூட்டை ரூ.14,500க்கு விற்றது. தற்போது மூட்டைக்கு ரூ.1500 அதிகரித்து, ரூ.16,000 என விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு மளிகை வியாபாரிகள் கூறினர்.

**ராசிபுரத்தில் 856 பருத்தி மூட்டை ரூ.14 லட்சத்துக்கு ஏலம்**

ராசிபுரம், : ராசிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், ஜேடர்பாளையம், பாச்சல், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. ஆர்.சி.ஹெச்., டி.சி.ஹெச்., சுரபி போன்ற ரகங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவைகள் விற்பனைக்காக, ராசிபுரம் ஆர்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரந்தோறும் திங்கட்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வந்து குவிக்கப்படும்.

அவ்வாறு நேற்று நடந்த ஏலத்தில், பல்வேறு பகுதிகளில் இருந்து 856 மூட்டை பருத்தி ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. இவை தரம் பிரிக்கப்பட்டு, விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி, ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சமாக ரூ.4,552க்கும், அதிகபட்சமாக ரூ.4,886க்கும், டி.சி.ஹெச்., குறைந்தபட்சமாக ரூ.5,029க்கும், அதிகபட்சமாக ரூ.6,339க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், மொத்தம் 856 மூட்டை பருத்தி ரூ.14 லட்சத்துக்கு விற்பனையானது.

## கிருஷ்ணராயபுரம் பகுதியில் மழையின்மையால் நெல் சாகுபடி குறைவு

கரூர், . மழையின்மையால் கிருஷ்ணராயபுரம் பகுதியில் நெல் சாகுபடி குறைந்துள்ளது.கரூர் அடுத்த கிருஷ்ணராயபுரம் பகுதி சித்தலவாய், பழையஜெயங்கொண்டம், வளையபட்டி, பணிக்கம்பட்டி, குட்டப்பட்டி, பிச்சம்பட்டி போன்ற பகுதிகளில் மழையின்மை காரணமாக நெல்சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. இப்பகுதிக்கு தென்கரை வாய்க்கால் மூலம் பாசன நீர் பெறப்படுகிறது. இந்த வட்டாரத்தில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வந்தது. போதுமான மழையின்றியும் பாசன வாய்க்காலில் தண்ணீர் கிடைக்காததாலும் நெல்சாகுபடி பாதியாக குறைந்துவிட்டது என விவசாயிகள் தெரிவித்தனர்.

இதனால் பரவலாக வாழை, வெற்றிலைகொடிக்கால், அவுரிசெடி, கரும்பு போன்றவை பயிரிடப்பட்டு வருகின்றன.

## குன்னூர் ஏல மையத்தில் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் இந்தாண்டுக்கான 14வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடந்தது. இதில் மொத்தம் 9 லட்சத்து 56 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 6.56 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாடு வர்த்தகர்கள் பங்களிப்பு அதிகரித்திருந்ததால் 88 சதவீத தேயிலை தூள் விற்பனை செய்யப்பட்டது. இருப்பினும் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை உயர்ந்தது. இந்தவார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை இலை ரகத்தில் ரூ.60 முதல் ரூ.70, உயர்வகை ரூ.100 முதல் ரூ.140, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.82 முதல் ரூ.87, உயர் ரகம் ரூ.110 முதல் ரூ.145 விலை கிடைத்தது. சிடிசி ரகத்திற்கு

அதிகபட்சமாக ரூ.198, ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.244 விலை கிடைத்தது. அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது. இதில் மொத்தம் 9.83 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## கண்ணபுரம் மாட்டுச் சந்தை களைகட்டியது காங்கயம் செவலை மாடு ரூ.2 லட்சத்துக்கு விற்பனை

காங்கயம், : காங்கயம் அடுத்துள்ள புகழ்பெற்ற கண்ணபுரம் மாட்டுச் சந்தை களைகட்டியது. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காங்கயம் இன மாடுகள் குவிந்தன. காங்கேயம் இன மாடுகள் ரூ.2 லட்சம் வரை விற்பனையாகிறது. காங்கயம் ஓலப்பாளையம் அடுத்துள்ள கண்ணபுரத்தில் சுமார் ஆயிரம் ஆண்டுகள் பிரசித்தி பெற்ற விக்ரமசோழீஸ்வரர் கோயில் தேர்த் திருவிழா மற்றும் மாரியம்மன் கோயில் பொங்கல் விழாவையொட்டி ஆண்டுதோறும் காங்கயம் இன மாடுகள் சந்தை நடைபெறுவது வழக்கம். பல நூறு ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்த சந்தை, இந்த ஆண்டு கடந்த 6ம் தேதி தொடங்கியது.

காங்கயம், உடுமலை, தாராபுரம், வெள்ளக்கோவில், திருப்பூர், பொள்ளாச்சி, பல்லடம், கோவை பகுதிகளிலிருந்து காங்கயம் இன மாடுகள், காளைகள், கன்றுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளன. புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், வேலூர், ஒரத்தநாடு, கரூர், ஈரோடு, போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஏராளமானோர் வந்து காளைகள், மாடுகள், கன்றுகளை வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த ஆண்டு சுமார் 3 ஆயிரம் மாடுகள் விற்பனைக்கு வந்ததாக கூறப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டைக் காட்டிலும் தற்போது சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. இதில் ஒரு வயதுள்ள காங்கயம் இன கிடாரிகள் ரூ. 30 ஆயிரம் வரை விற்பனையாகிறது. 2 வயதுள்ள கிடாரிகள் ரூ.50 ஆயிரம்

முதல் 70 ஆயிரம் வரை விற்பனையாகிறது. கறவை மாடுகளில் மயிலை ரகம் ரூ.1 லட்சம் வரையிலும், செவலை ரூ.1.5 லட்சம் வரையிலும், காரி ரகம் ரூ.1.5 லட்சத்திற்கும் அதிகமாகவும் விற்பனையாகிறது.

ஆனால், காளைகள் விற்பனை மந்தமாகவும் விலை குறைந்தும் காணப்பட்டது. காளைகள் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை விற்பனையாகிறது. ரேக்ளா ரேஸ், ஜல்லிக்கட்டுக்கான தடை காரணமாகவே காளைகளின் விலை குறைந்ததாக கூறப்படுகிறது. திருச்சி, புதுக்கோட்டை, வேலூர், தஞ்சாவூர் பகுதிகளைச் சேர்ந்தோர் மாடுகளை வாங்கியவுடன் மாரியம்மன் கோயிலுக்கு கொண்டு வந்து பூஜை செய்த பின்னரே அதைக் கொண்டு செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளதாக கூறுகிறார்கள்.

கண்ணபுரம் மாட்டுச் சந்தையையொட்டி காளைகள், மாடுகளுக்குத் தேவையான திருகாணிகள், சாட்டைகள், சலங்கைகள், தும்புக் கயிறுகள் போன்றவை விற்பனை செய்யும் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து, கண்ணபுரம் விக்ரமசோழீஸ்வரர் கோயில் திருப்பணிக்குழு தலைவர் வரதராஜ் கூறியது: கடந்த 15 வருடங்களுக்கு முன்பு வரை சுமார் 30 ஆயிரம் மாடுகளுக்கு மேல் விற்பனைக்கு வந்து கொண்டிருந்தது. விவசாயத்திற்கு முழுவதும் காங்கயம் இன காளைகள் பயன்படுத்தப்பட்ட காலத்தில் பசு மாடுகள், காளைகளின் தேவை அதிகமாக இருந்தது. படிப்படியாக விவசாயம் இயந்திரமயமான பின்னர் விவசாய பணிகளுக்கு காளைகளின் தேவை முற்றிலுமாக குறைந்தது.

பால் தேவைக்கு அதிக பாலை தரும் சீமை மாடுகள் வந்த பின்னர், காங்கயம் இன மாடுகள் குறையத் தொடங்கின. தற்போது காங்கயம் இன மாடுகளின் முக்கியத்துவம், காங்கயம் இன மாட்டின் பாலில் உள்ள மருத்துவ குணங்கள் என விழிப்புணர்வு, மக்கள் மனதில் வந்த பிறகு காங்கயம் இன மாடுகள் வாங்கும் எண்ணம் அதிகரித்துள்ளது. சந்தைக்கு

மாடுகள் வரத்து அதிகமானதுடன் விற்பனையும் அதிகரித்துள்ளது. வரும் காலங்களில் இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார்.

**பயறுகளை பாழ்படுத்தும் சிவப்பு கம்பளி பூச்சிகள்**

பழநி, : பயறு வகைகளில் சிவப்பு கம்பளிப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் தெரிவித்ததாது: பழநி வட்டார பகுதிகளில் உளுந்து, தட்டை போன்ற பயறு வகைகள் சுமார் 1000 ஏக்கர் அளவில் மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிர்களில் சிவப்பு கம்பளி புழுக்களின் தாக்குதல் ஆங்காங்கே பரவலாக காணப்படுகிறது. சிவப்பு கம்பளிப் பூச்சியானது அதிகளவில் நிலக்கடலை பயிரை மட்டுமே தாக்கும்.

ஆனால், கடந்த 2 ஆண்டுகளாக நிலக்கடலை சாகுபடி பரப்பு குறைந்து விட்டது. மற்ற பயறு வகைகளின் சாகுபடியும் அதிகளவில் இல்லை. இதனால் தற்போது பயிரிடப்பட்டுள்ள அனைத்து பயறு வகைகளிலும் இப்பூச்சியின் தாக்குதல் அதிகளவு உள்ளது. குறிப்பாக உளுந்து மற்றும் தட்டைப் பயறுகளில் இதன் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இப்பூச்சியானது இலைகள் அனைத்தையும் வேகமாக தின்று தண்டுகளைமட்டுமே விட்டு வைக்கிறது. மேலும், இது வேகமாக பரவக்கூடிய தன்மை உடையது. ஆழமாக உழவு செய்வதால், மண்ணின் கீழே தங்கி உள்ள கூட்டுப் புழுக்கள் மேலே கொண்டு வரப்பட்டு பறவைகளால் அழிக்கப்படுகின்றன.

ஊடு பயிராக அல்லது வரப்பை சுற்றி 5 அல்லது 6 வரிசைகள் ஆமணக்கு செடிகளை நட வேண்டும். சோளம், மக்காச்சோளம் ஆகிய பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்ய வேண்டும். விதைத்த பின் தொடர்ந்து வறட்சி காணப்படும் போது, இப்பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கும். அதனால் மண்ணின் தன்மையைப் பொறுத்து நீர்ப்பாசனம் செய்து பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். ஆங்காங்கே காணப்படும்

வளர்ந்த புழுக்கள் மற்றும் முட்டைக் குவியல்களை பொறுக்கி அழிக்கலாம். வயல்களில் ஆங்காங்கே பறவைகள் அமர்வு குச்சிகள் வைக்கலாம். விதைத்த 15 நாட்களுக்குள் களை நிர்வாகம் செய்யப்பட வேண்டும். என்.பி.வி அல்லது நுண்ணுயிர் கொல்லிகளை பி.டி தெளிக்கலாம். மேற்கண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளுடன் பூச்சிக் கொல்லி மருந்துகள் கார்பரில் 50% அல்லது ஹெக்டேருக்கு குயிலைபாஸ் 1500 மில்லி அல்லது ஹெக்டேருக்கு நூலான் 500 மில்லி இவற்றில் ஏகேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு தெரிவித்தனர்.

## பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கலாம் பயறுகளை நாசமாக்கும் கம்பளிபூச்சி ஆலோசனை தருகிறது வேளாண்துறை

திருச்சுழி, : பயறு வகைகளில் சிவப்பு கம்பளிப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கலாம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். பயறு வகை பயிர்களில் சிவப்பு கம்பளி புழுக்களின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. குறிப்பாக பயறு வகைகளான உளுந்து மற்றும் கட்டைப் பயறுகளில் இதன் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இப்பூச்சியானது இலைகள் அனைத்தையும் வேகமாக தின்று தண்டுகளை மட்டுமே விட்டு வைக்கிறது.

மேலும், இது வேகமாக பரவக்கூடிய தன்மை உடையது. ஆழமாக உழவு செய்வதால், மண்ணின் கீழே தங்கி உள்ள கூட்டுப் புழுக்கள் மேலே கொண்டு வரப்பட்டு பறவைகளால் அழிக்கப்படுகின்றன. ஊடு பயிராக அல்லது வரப்பை சுற்றி 5 அல்லது 6 வரிசைகள் ஆமணுக்கு செடிகளை நட வேண்டும். சோளம், மக்காச்சோளம் ஆகிய பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்ய வேண்டும். விதைத்த பின் தொடர்ந்து வறட்சி காணப்படும்போது, இப்பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கும்.

அதனால் மண்ணின் தன்மையைப் பொறுத்து நீர்ப்பாசனம் செய்து பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். ஆங்காங்கே காணப்படும் வளர்ந்த புழுக்கள் மற்றும் முட்டைக் குவியல்களை பொறுக்கி

அழிக்கலாம். வயல்களில் ஆங்காங்கே பறவைகள் அமர்வு குச்சிகள் வைக்கலாம். விதைத்த 15 நாட்களுக்குள் களை நிர்வாகம் செய்யப்பட வேண்டும். என்.பி.வி அல்லது நுண்ணுயிர் கொல்லிகளை தெளிக்கலாம். மேற்கண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளுடன் பூச்சிக் கொல்லி மருந்துகள் கார்பரில் 50 சதவீதம் அல்லது எக்டேருக்கு குயிலைபாஸ் 1500 மில்லி அல்லது எக்டேருக்கு நூலான் 500 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## குமரியில் தனியார் நர்சரிகளுக்கு விதை ஆய்வு இணை இயக்குநர் எச்சரிக்கை

நாகர்கோவில்: நாகர்கோவில் விதை ஆய்வாளர் ஜோஸ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: குமரி மாவட்டத்திற்கு ஆய்வு பணிக்காக கோவை விதை ஆய்வு இணை இயக்குநர் பாண்டியராஜன் வந்தார். கன்னியாகுமரி அரசு தோட்டக்கலை பண்ணையில் உள்ள தாய்மர செடிகளை பார்வையிட்டு, உரிய விதை விற்பனை உரிமம் பெற்று இயங்கி வருவது குறித்து ஆய்வு செய்தார். அரசு, அரசு சார்பு, தனியார் விதை விற்பனை நிலையங்கள் உரிமம் பெற்று இயங்கி வருவது குறித்தும், உரிய பதிவேடுகள் தொடர்ந்து பராமரிக்கவும் அறிவுரை வழங்கினார். தனியார் நர்சரிகள் உரிய உரிமம் இன்றி உணவிற்காக பயன்படுத்தப்படும் பழமரக் கன்றுகள் விற்பனை செய்தால் விதை சட்ட விதிமுறைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## குன்னூர் பகுதியில் கடும் வெயில் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி தாக்குதல் அதிகரிப்பு



குன்னூர்,

குன்னூர் பகுதியில் கடும் வெயில் அடித்து வருவதால் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி தாக்குதல் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>பலத்த மழை</u>

குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பலத்த மழை பெய்தது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை பலத்த மழை பெய்ய வில்லை. ஜனவரி, பிப்ரவரி, மார்ச்

2–வது வாரம் வரை கடும் உறைபனி நிலவியது. தொடர்ந்து பகல் நேரங்களில் கடும் வெயிலும் அடித்து வந்தது.

இதன் காரணமாக செடி, கொடிகள் காய்ந்து வருகின்றன. மேலும் வறட்சி நிலவுவதால் நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரத்து குறைந்துள்ளதுடன், குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

சிவப்பு சிலந்தி தாக்குதல்

இதனிடையே இந்த மாதத்தில் பலத்த மழை பெய்யும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால் கடந்த 2 நாட்களுக்கு முன்பு லேசான மழை பெய்தது. இந்த மழை எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்த வில்லை. தொடர்ந்து கடும் வெயில் அடித்து வருவதால், முக்கிய விவசாய பயிரான தேயிலை செடிகள் வாடி வருகின்றன.

இதுமட்டுமின்றி கோடை காலத்தில் தாக்கும் சிவப்பு சிலந்தி தாக்குதலும் தற்போது தேயிலை செடிகளில் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேலும் சிவப்பு சிலந்தியை கட்டுப்படுத்த மருந்து அடிப்பதற்கு தற்போது மருந்தின் விலை அதிகமாக இருப்பதால், விவசாயிகள் பலத்த மழையை எதிர்பார்த்துள்ளனர். பலத்த மழை பெய்தால் சிவப்பு சிலந்தியின் தாக்குதல் குறையும் வாய்ப்பு உள்ளது.

பொதுமக்கள் பாதிப்பு

இந்த நிலையில் நேற்று குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் கடும் வெப்பம் நிலவியது. காலை முதலே வெயிலின் தாக்கம் அதிகரித்து இருந்ததால் பொதுமக்கள் பாதிப்படைந்தனர். பின்னர் மதியத்துக்கு மேல் வானத்தில் லேசான மேக மூட்டம் காணப்பட்டாலும் மழைக்கான அறிகுறி தென்படவில்லை. இதையொட்டி கோடை மழை எப்போது பெய்யும் என்று விவசாயிகள், பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர்.